2003 மார்ச் 24]

46—

பணியிடம் மாறுதல்

***5487—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயில்கள் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை ஒரு கோயில் பள்ளியிலிருந்து இன்னொரு கோயில் பள்ளிக்கு மாறுதல் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒவ்வொரு திருக்கோயில் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவரும் பள்ளிகளுக்குத் தனித் தனியாக நிர்வாகக் குழு உள்ளது. ஆகவே, ஒரு திருக்கோயில் பள்ளியிலிருந்து இன்னொரு திருக்கோயில் பள்ளிக்கு ஆசிரியர்களை மாறுதல் செய்ய இயலாது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.எம். சீனிவேல்: அம்மாவின் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் கீழ் பள்ளிக்கூடங்கள் நிறைய உள்ளதால் ஆசிரியர்களை மாற்றி அமைத்திட, உத்தரவிட அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களால் 23 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அப்பள்ளிகளில் 416 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொரு திருக்கோயிலால் நடத்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அத்திருக்கோயில் பணியாளர்களாகவே கருதப்படுகின்றனர். ஒரு திருக்கோயில் பணியாளர்களை மற்றொரு திருக்கோயிலுக்கு பணிமாற்றம் செய்ய இயலாது. அதேபோன்று ஒரு திருக்கோயிலுக்குச் சொந்தமான பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களை மற்றொரு திருக்கோயிலுக்குச் சொந்தமான பள்ளிக்கு இடமாற்றம் செய்ய இயலாது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மார்ச் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயில் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஏதாவது தவறு செய்வார்கள் என்று சொன்னால் வேறு இடத்திற்கு மாற்றுவது போன்ற ஓர் உத்தரவைத்தான் பிறப்பிக்க வேண்டி இருக்கும். ஆகவே ஒரு கோயில் நிர்வாகத்திலிருந்து இன்னொரு கோயில் நிர்வாகத்திற்கு இல்லை என்று சொன்னாலும், கோயில் நிர்வாகத்திலிருந்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றுவதற்கான ஓர் ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நிர்வாகம், தனிப்பட்டது. அது வேறு நிர்வாகம். மாற்றம் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக நடைபெறுகிற பள்ளிகளைப் பொறுத்தவரை இடமாறுதல் பண்ண இயலாது என்று கூறியிருக்கிறார். அப்படியென்றால் காலியாக உள்ள பணியிடங்களை இந்த ஆண்டு நிரப்புவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு, கூடிய விரைவில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு ஆசிரியர்கள் நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திரு. பி.எஸ். அருள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.